பல்வேறு திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. அவற்றில், ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ், காடத்து நாச்சியம்மன் கண்மாயில் ஒரு புதிய பாலம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மக்கள் நீச்சல் அடித்துச் செல்லவேண்டியதில்லை. அங்கு பாலம் கட்ட 70 இலட்சம் ரூபாய் மதிப்பீடு என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கோயிலுக்கும் கண்மாய் வழியாக நிலங்களுக்குச் செல்லக்கூடிய விவசாயிகளுக்கும் பயன்படும் வகையில் பாலம் கட்ட கண்டிப்பாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில், அதிக அளவிலான பாலங்கள் நெடுஞ்சாலைத் துறை மூலமாகவும், ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை மூலமாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. பெரிய பெரிய பாலங்கள்கூட இன்றைக்கு உள்ளாட்சித் துறையின்மூலம் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை தொடர்பாக நிச்சயமாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

150—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***52682—திரு. ப. கந்தசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி அவர்கள்.

திரு. ப. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகையே அச்சுறுத்தும் கொரோனா வைரசை தமிழகத்திற்குள் வராமல் தடுத்து, தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் எங்கு கொரோனா வைரஸ் பாதிப்பு வந்தாலும், உடனடியாக அதுகுறித்து சட்டமன்றத்தில் தெரிவிப்பதற்கு ஏதுவாக, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழக மக்களின் நலன்மீது அக்கறை செலுத்தி, தொடர்ந்து சட்டமன்றக் கூட்டத்தொடரை நடத்திவரும் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர், மாற்றம் தரும் திட்டங்களின்மூலம் ஏற்றம் தருகின்ற ஏர்முனை நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அதோடு, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், கொங்கு மண்டலத்தில் கொரோனா வைரஸ் வராமல் தடுத்து, அதற்கான நடவடிக்கைகளை எடுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 12 அரசு மேல்நிலைப் பள்ளிகள், 6 அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 10–க்கும் மேற்பட்ட தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் கிட்டத்தட்ட 1,559 மாணவர்கள் படிக்கின்றார்கள். அங்கு படிக்கின்ற ஏழை எளிய மக்களுடைய குழந்தைகள், கல்லூரிகளில் படித்து பயன்பெறக்கூடிய வகையில், எனது தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல்

கல்லூரியைத் தொடங்கிட வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சூலூர் தொகுதியானது, கோவை மாவட்டத்தில் அமைந்திருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஒரே ஒரு அரசுக் கல்லூரியாக இருந்த நிலையில், இன்னொரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்கிவைத்த பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில், ஒட்டுமொத்தமாக, ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி மட்டுமே இயங்கிக்கொண்டிருந்த அந்தப் பகுதியில், இரண்டு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைத் துவக்கிவைத்த பெருமை இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையே சாரும் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–25

ஒட்டுமொத்தமாக 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்ற கோவை மாவட்டத்தில், 2019–2020 ஆம் கல்வி ஆண்டில் மொத்தமாக ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 3,273 ஆகும். அதிலே, மாணாக்கர்களுடைய சேர்க்கை 2,845; அரசு கலைக் கல்லூரிகளில் மட்டும் 428 இடங்கள் காலியாகவுள்ளன. அதோடுமட்டுமல்லாமல், கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசு நிதி உதவி பெறும் 7 கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 5,180; அதில் மாணாக்கர்களுடைய சேர்க்கை 4,135; 1,045 இடங்கள் காலியாகவுள்ளன. ஒட்டுமொத்தமாக அங்கே 54 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. 2019–2020 ஆம் ஆண்டில், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு நிதி உதவிபெறும் கல்லூரிகளில் மட்டும், ஒப்பளிக்கப்பட்ட இடங்களில்

1,473 இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவேதான், அந்தப் பகுதியில் வரவிருக்கக்கூடிய கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்குவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி அவர்கள்.

திரு. ப. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 300–க்கும் மேற்பட்ட நூற்பாலைகள், Sulzer, Rapier, Air–Jet போன்ற நவீன முறையில் துணி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், மோட்டார் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் செய்யும் தொழிற்சாலைகள், தென்னை நார் உற்பத்தி, Crusher தொழில் மற்றும் M–Sand தயாரிக்கும் பல தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக சூலூர் தொகுதி இருக்கின்றது. எனவே, நம்முடைய மாண்புமிகு மக்கள் முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இந்தப் பகுதியில் படிக்கும் மாணவர்களுக்கு, பயிற்சி அளிக்கக்கூடிய வகையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை சூலூர் தொகுதியில் அமைத்துக்கொடுக்க வேண்டும். அங்குள்ள இளைஞர்கள் சுய தொழில் தொடங்குவதற்கும், சுயமாகத் தொழில் செய்து வாழ்க்கையை நடத்துவதற்கும், அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடிய நவீன யுக்திகளைப் பயிற்றுவிக்கும் வகையில், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றைக் கொண்டுவருவதற்கு நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிதொடரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசானது, வரவிருக்கக்கூடிய கல்வியாண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில் இதுவரையில் எந்தவொரு கல்லூரியும் இல்லாத காரணத்தால், மாணவர்கள் மேற்படிப்பு படிப்பதற்காக ஓசூர் அல்லது கிருஷ்ணகிரிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தேன்கனிக்கோட்டையை மையமாகக் கொண்டு, அங்கே கலை மற்றும் அறிவியல் கல்லூரி (Arts and Science College) ஒன்றை அமைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பையேற்ற பிறகு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் உயர் கல்வி கிடைக்கின்ற வகையில், பல்வேறு கல்லூரிகளைத் தோற்றுவித்தார். கிருஷ்ணகிரியை மையமாகக் கொண்டு அங்கே ஏற்கெனவே ஒரேயொரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மட்டும் இயங்கி வந்தது. அந்த நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பர்கூர் மற்றும் கிருஷ்ணகிரியில் பெண்களுக்கென்று தனியாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தோற்றுவித்தார். அதோடுமட்டுமல்லாமல், பலவகை தொழில்நுட்பக் கல்லூரியையும் தோற்றுவித்தார். ஓசூரை மையமாகக் கொண்டு புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தோற்றுவித்தார்; கெலமங்கலத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றையும் தோற்றுவித்தார்; ஊத்தங்கரையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றையும் தோற்றுவித்தார்; ஆகவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உயர் கல்வி பெறுவதற்காக முழுமையாக அனைத்து வாய்ப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற தேன்கனிக்கோட்டை பகுதி, கிட்டத்தட்ட ஓசூருக்கு அருகில் இருப்பதால், அங்கே கூடுதலாக பாடப் பிரிவுகளும், கூடுதல் கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியிலுள்ள அனைத்து மாணவர்களும் கல்லூரியில் சேர்க்கை பெறுகின்ற வகையில், பாடப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டு, அவர்கள் உயர் கல்வி பெறுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தேன்கனிக்கோட்டை பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றைத் தோற்றுவிக்கின்ற வாய்ப்பு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, தேன்கனிக்கோட்டை பகுதியில் மாணாக்கர்களுடைய சேர்க்கை சதவிகிதம் அதிகரிக்கின்றபட்சத்தில், அந்தப் பகுதியில் புதிதாக ஒரு கல்லூரியைத் தோற்றுவிப்பதற்கு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசானது பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

151—

கால்நடைக் கிளை நிலையம்

***50920—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, வேப்பம்பட்டி ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,